மத்தியிலே கூலி உயர்வு கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அரசினுடைய பலிசீலனையிலே அந்தக் கருத்து இருந்துகொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெ. நெடுஞ்செழியன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

85—

கட்டட வசதி

***31597—திரு. ரெ. நெடுஞ்செழியன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, குன்னன்டார் கோயில் ஒன்றியம், தெம்மாவூர் ஊராட்சி அரசு உயர்நிலைப் பள்ளியில் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, குன்னன்டார் கோயில் ஒன்றியம், தெம்மாவூர் ஊராட்சி, அரசு உயர்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கி நிதி உதவித் திட்டத்தின்கீழ், திட்டம் 9-ல் கூடுதலாக 11 வகுப்பறைகள் கட்ட ரூ.55.33 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசாணை (நிலை) எண் 221, பள்ளிக் கல்வித் துறை, நாள் 11-11-2008-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெ. நெடுஞ்செழியன்.

திரு. ரெ. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது புதுக்கோட்டை தொகுதியில் கந்தர்வக்கோட்டை தாலுகா, வேளாடிப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் 600 மாணவ, மாணவிகள் படிக்கின்றார்கள். இவர்கள் படிப்பதற்கு இந்தப் பள்ளியிலே 2 வகுப்பறைகள் மட்டுமே இருக்கின்றன. இந்தப் பள்ளியில் மாணவ, மாணவிகள் அனைவரும் காலையிலிருந்து மாலைவரை மரத்தடியிலே அமர்ந்து படிக்கக்கூடிய சூழ்நிலை

இருக்கின்றது. மேலும், புதுக்கோட்டை இராணியார் அரசு மேல்நிலைப் பள்ளியில் 2,500 மாணவிகள் படிக்கின்றார்கள். அந்தப் பள்ளியிலேயும் கூடுதலாகப் பள்ளிக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அங்கே கழிப்பறை வசதிகளும் இல்லை; சுற்றுச் சுவரும் இல்லை. இவற்றையும் கட்டித் தர அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-லே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, புதுக்கோட்டை மாவட்டத்திலே, நபார்டு வங்கி 7 மற்றும் 9-வது திட்டத்தின்கீழ், ஏறத்தாழ 79 பள்ளிகளிலே 920 வகுப்பறைகள், 59 ஆய்வகங்கள், 221 கழிவறை யூனிட்டுகள் என்று ஏறத்தாழ 56.58 கோடி ரூபாய் செலவிலே பல்வேறு பள்ளிகளிலே அத்தகைய கட்டடப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நபார்டு வங்கியின் 10-வது திட்டத்தினுடைய இறுதிப் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. அந்த விவரம் அரசுக்கு வந்திருக்கிறது. அந்தத் திட்டத்திலேயே குறிப்பிட்டிருக்கக்கூடிய இரண்டு பள்ளிகளிலும் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெ. நெடுஞ்செழியன்.

திரு. ரெ. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது புதுக்கோட்டை தொகுதி, பெருங்களூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 1,500 மாணவ, மாணவிகள் படிக்கின்றார்கள். முழுக்க முழுக்க, கிராமப் பகுதிகளிலே வாழக்கூடிய மாணவ, மாணவிகள் பயில்கின்ற அந்தப் பள்ளியில் வருடந்தோறும் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளிலே 100 சதவிகிதம் தேர்ச்சி பெறுகின்றார்கள். ஆனால், அவர்கள் பொதுத் தேர்வு எழுத வேண்டுமென்று சொன்னால், 17 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கக்கூடிய புதுக்கோட்டைக்கு சென்றுதான் பொதுத் தேர்வு எழுதக்கூடிய கட்டாயச் சூழ்நிலை இருக்கிறது. ஆனால், அரசு

2009 ஜூலை 3]

கேட்கக்கூடிய அத்தனை அடிப்படை வசதிகளும் அங்கு உள்ளன. பள்ளியைச் சுற்றி காம்பவுண்ட் சுவர் இருக்கின்றது. போதிய அளவு desks, benches எல்லாம் இருக்கின்றன. ஆகவே, பெருங்களூர் மேல்நிலைப் பள்ளியிலேயே பொதுத் தேர்வு எழுதுவதற்கு அனுமதியளிக்க அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கின்றபோது, நபார்டு திட்டத்தின்மூலமாக கட்டடங்கள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னார்கள். அதனைக் கருத்திலே கொண்டு, வடவாளம் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி, மூக்கம்பட்டி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி, வாராப்பூர் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி, காமராஜபுரம் உயர்நிலைப் பள்ளி, சந்தப்பேட்டை உயர்நிலைப் பள்ளி, திருக்கோகர்ணம் ஆண்கள், பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கந்தர்வக்கோட்டை ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கந்தர்வக்கோட்டை பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வருடமும் தேவைக்கேற்ப, 50 இடங்களிலே புதிதாகத் தேர்வு மையங்களை உருவாக்கி அரசு உத்தரவிடுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய அந்தப் பள்ளியை பெருங்களூர் வழியாக நான் செல்லக்கூடிய நேரத்திலே பல முறை பார்த்திருக்கிறேன். அது கிராமப்புறத்திலே அமைந்திருக்கக்கூடிய பள்ளி. அங்கிருந்து புதுக்கோட்டைக்கு வர வேண்டுமென்று சொன்னால், அவர் சொல்வதைப்போல சுமார் 18 கிலோ மீட்டர் தூரம் வரவேண்டிய நிலை இருப்பதையும் நான் அறிவேன். எனவே, இந்த ஆண்டு புதிய தேர்வு மையங்கள் வழங்குகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய பள்ளிக்கு வழங்குவதற்கு நிச்சயமாக அரசு ஆவன செய்யும்.

இரண்டாவது, அவர் பல பள்ளிகளைக் குறிப்பிட்டு, அந்தப் பள்ளிகளிலே புதிய கட்டடங்கள் எழுப்ப வேண்டுமென்று கேட்டிருக்கிறார். நிச்சயமாக வரக்கூடிய திட்டங்களிலே அந்தப் பள்ளிகளை ஏற்றுக்கொள்வதற்கு அரசு ஆவன செய்யும்.

[2009 ஜூலை 3

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.*

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து* infrastructure-*களுடன் பள்ளிக்கூடங்களை கட்டி, அனைவருக்கும் தரமான கல்வி கொடுப்பதற்காக முயன்று கொண்டிருக்கிறது. இப்பொழுது பொதுப் பட்டியலில் கல்வி இருக்கக்கூடிய நிலையில் மத்திய அரசும் சில பாடத் திட்டங்களுக்கு அனுமதியளிக்கிறது; தமிழகத்திலே நம்முடைய அரசும் தனிக் கொள்கை வைத்துக்கொண்டு பாடத் திட்டங்களுக்கு அனுமதி அளிக்கிறது. இந்தக் காலகட்டத்தில், மாண்புமிகு மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வை எடுத்துவிடலாம் என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இதில் தமிழக அரசினுடைய நிலைப்பாடு என்ன? கல்வித் தரம் உயர வேண்டுமென்று சொன்னால் 10 ஆம் வகுப்பிலே தேர்வு இருந்து, அதில் ஒரு மாணவன் முதலிலே டெஸ்ட் எடுத்துக்கொண்ட பிறகு +2 தேர்வுக்குத் தயாராகி, பிறகு கல்லூரிக்குச் செல்ல வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழக அரசினுடைய நிலைப்பாட்டை விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. கபில் சிபல் அவர்கள் இத்தகைய ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள் என்று பத்திரிகையின்வாயிலாக நாம் அறிந்துகொண்டோம். அவருடைய கருத்தின்வாயிலாக தமிழகத்திலே மாத்திரமல்ல, தேசிய அளவிலேயே அதிலே ஒரு விவாதம் ஏற்பட்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தமட்டிலும்கூட இத்தகைய கருத்துகளுக்கு முரண்பட்ட கருத்துகள் வந்திருக்கின்றன. ஒரு சாரார் இது வேண்டுமென்று கேட்கிறார்கள், ஒரு சாரார் இது வேண்டாம் என்றும் சொல்கிறார்கள்.* For-*ம் இருக்கிறது* against-*ம் இருக்கிறது. தேசிய அளவிலே இன்றைக்கு அது ஒரு விவாதப் பொருளாகியிருக்கிறது.*

2009 ஜூலை 3]

தமிழகத்தைப் பொறுத்தமட்டிலே, இத்தகைய தேர்வுகள் இரத்து செய்யப்படுவது என்பது நிகழ்ந்திருக்கிறது. மாவட்டக் கழகங்கள் இருந்தபோது ஐந்தாம் வகுப்பிலிருந்து ஆறாம் வகுப்புக்கு போகக்கூடிய அந்த நுழைவுத் தேர்வு இரத்து செய்யப்பட்டிருக்கிறது. பின்னாலே E.S.L.C. என்று வருகின்றபோது பொதுத் தேர்வுகள் இரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன. 10 ஆம் வகுப்பைப் பொறுத்தமட்டில், நம்முடைய நிலைப்பாடு, இதுவரையில் இருக்கக்கூடிய சூழ்நிலை என்னவென்றால், 10 ஆம் வகுப்பு என்பது மேல்நிலை வகுப்புகளுக்குச் செல்லக்கூடிய அளவிற்கு ஒரு படிநிலையாகக் கருதக்கூடிய வாய்ப்பாக இருக்கிறது. 10 ஆம் வகுப்பிலிருந்து சிலர் Polytechnic, I.T.I. என்ற தொழில் துறை படிப்புகளுக்குச் செல்கிறார்கள். மேற்கொண்டு 12 ஆம் வகுப்புக்குச் செல்லக்கூடிய நிலையும் இருக்கிறது. எனவே, அங்கே ஒரு qualification, examination தேவை என்ற முறையில் இதுவரையில் இருந்து வருகிறது. மாண்புமிகு மத்திய அமைச்சர் ஒன்றைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இதை Optional என்ற வகையில்தான் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது இதை வலியுறுத்திச் சொல்லவில்லை. Optional-ஆக அவர் இந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார். Yashpal Committee-யிலே என்ன சொல்லியிருக்கிறார்களோ அதைப்போன்று பல்வேறு கருத்துகளை, N.C.E.R.T.-யிலேகூட ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் இதுகுறித்து இன்னொன்றையும் மத்திய அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இது குறித்து மாநில அரசினுடைய கருத்துகளை நாங்கள் கேட்டறிவோம் என்றும் மாண்புமிகு திரு. கபில் சிபல் அவர்கள் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, மத்திய அரசாங்கத்திலிருந்து அத்தகைய கருத்துகளை நம்மிடத்திலே கேட்கின்றபோது நாமும் நம்முடைய கல்வியாளர்களிடத்திலே, வல்லுநர்களிடத்திலே, பல்வேறு ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளிடத்திலே எல்லோரிடமும் கலந்தாலோசித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலையும் பெற்று நம்முடைய அரசினுடைய நிலைப்பாட்டை மத்திய அரசுக்குத் தெரிவிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.